2020 ஜனவரி 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(எ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2020), மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2020), @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இதையெல்லாம் ஏற்கெனவே நீங்கள் பேசியாகிவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஊராட்சிகளுக்கான சட்டம். அதுமட்டுமல்ல, இப்போது ஊராட்சிகளுக்கான தேர்தல்–நான் வரிசை எண் 7 மற்றும் 8–திருத்தச் சட்டம் மற்றும் இரண்டாம் திருத்தச் சட்டம் ஆகிய இரண்டின்மீதும் சொல்ல விரும்புகிறேன். அதாவது ஏற்கெனவே*

*@ **9—1—2020** ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.*

ஊராட்சிகளுக்கான தேர்தல் முடிவடைந்த சூழ்நிலையில், இந்த S.O. extension, முதல் அவை கூடியவுடனேயே ஒரு முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்று நான் நினைக்கிறேன். மேலும் அதற்குண்டான extension-க்கு அவசியம் ஏற்படாது. அவை கூடியவுடன் எந்த ஊராட்சி மன்றமோ அல்லது Union Chairman, இவர்கள் பதவியேற்றவுடன், S.O. extension-க்கு அவசியம் ஏற்படாது. அவர்களுக்கு அந்த அவையை நடத்துவதற்கு முழு உரிமையும் வழங்கப்பட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, நீங்கள் இந்த Bill-ஐ தவறாகப் புரிந்து கொண்டு பேசுகிறீர்கள். அது அடுத்ததாக வரக்கூடியது, இது அல்ல. சரி. அடுத்ததாக நீங்கள் பேச வேண்டாம், இப்போது பேச வேண்டியதைப் பேசுங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரி, அடுத்ததற்காக எடுத்துக்கொள்ளுங்கள். நான் இந்த இரண்டுக்கும் சேர்த்துதான் சொல்கிறேன். என்னுடைய கருத்து 7 மற்றும் 8-இரண்டிற்கும் extension-ஐப் பொறுத்தவரைக்கும் நான் mention செய்துவிடுகிறேன். நீங்கள் இரண்டையும் சேர்த்து நிறைவேற்றிக்கொள்ளலாம். அந்த வகையில் extension ..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், ஏழாவது சட்டமுன்வடிவில் extension இல்லை.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த Bill. அடுத்து 8 ஆம் எண் Bill-ல் வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, நீங்கள் சொல்வதைச் சொல்லுங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்லி முடித்துவிடுகிறேன். ஊராட்சி என்று எடுத்துவிட்டார்கள். ஆகவே, அந்த இரண்டிற்கும் எங்களுடைய கருத்தாக இதனை எடுத்துக்கொள்ளுங்கள். அந்தந்த ஊராட்சித் தலைவர்கள் பதவியேற்றவுடன் extension-ஐ முடிவிற்குக் கொண்டு வருவதற்கான சாத்தியக்கூறுகளை ஏற்படுத்த வேண்டும் என்று காங்கிரஸ் தரப்பில் கேட்டுக்கொள்கிறோம்.

2020 ஜனவரி 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருங்கள். அடுத்த சட்டமுன்வடிவில் பேசலாம், உட்காருங்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிற்பகல் 2–20

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2020) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

(ஏ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2020), மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2020)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

---

*@ **9—1—2020** ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.*